# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 007/மா/2018

ஆணை எண். 106/2018

நாள் : 19/04/2018

**திரு C. ராஜசேகரபாண்டியன்,**
**அம்பத்தூர், சென்னை 600 053.** – முறையீட்டு மனுதாரர்

**1) மண்டல அலுவலர் / உதவி பொறியாளர்,**
**மண்டலம் –7 , சென்னை மாநகராட்சி.**
**2) சட்ட அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி, சென்னை – 3** – எதிர் மனுதாரர்கள்

சென்னை மாநகராட்சி, அம்பத்தூர், மேனாம்பேடு, பாரத் நகர், எண்–106, கருக்கு பிரதான சாலை முகவரியில் வசிக்கும் திரு C. இராஜசேகரபாண்டியன் அவர்களின் 09.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2018 அன்று பெறப்பட்டு, 007/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக அம்பத்தூர் மண்டல அலுவலரின் அறிக்கை, முறையீட்டு மனுதாரர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, அம்பத்தூர், மேனாம்பேடு, பாரத் நகர், எண்–106, கருக்கு பிரதான சாலை முகவரியில் வசிக்கும் திரு C. இராஜசேகரபாண்டியன் என்பவர், அம்பத்தூர் நகரில் " இராஜன் சூப்பர் மார்க்கெட்" என்ற வணிக வளாகம் அனுமதியின்றி கட்டப்பட்டக் கட்டிடத்தில் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தும் கீழ்க்காணும் நிகழ்வுகளைக் குறிப்பிட்டும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதுடன், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்து எழுத்து பூர்வமான அறிக்கையினை 15 நாட்களுக்குள் தனக்கு வழங்கப்படவேண்டும் என கால நிர்ணயம் செய்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார்.

(1) அம்பத்தூர் நகரில் " இராஜன் சூப்பர் மார்க்கெட்" என்ற வணிக வளாகம், சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் (illegal Construction of building) செயல்பட்டு வருவது ;

(2) சட்டத்திற்குப் புறம்பாக கட்டப்பட்ட கட்டடம் குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி மண்டல அலுவலரிடம் முறையிட்டது ;

(3) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இக்கட்டடம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து விவரங்களை வினவியது ;

(4) கட்டட உரிமையாளர் திரு S. இராஜன் அவர்களுக்கு சட்டத்திற்குப் புறம்பான கட்டடம் குறித்து அவருக்கு மாநகராட்சியால் 17.10.2016 நாளிட்ட அறிவிக்கையினை (Notice) 20.10.2016 அன்று வழங்கும் முன்பே 19.10.2016 அன்று நீதிமன்றத்தில் அவர் வழக்கு தாக்கல் செய்தது ;

(5) கட்டட உரிமையாளர் தாக்கல் செய்த வழக்கினை எதிர்த்து, இதுமாதிரியான நேர்வில் "No Civil Court shall entertain any suit or proceedings or application in respect of the action taken by the CMDA or Corporation in respect of the illegal construction .......... என மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய குறித்துரையை இந்நேர்வு சம்பந்தப்பட்ட வழக்கில் குறிப்பிடத் தவறிய மாநகராட்சி சட்ட அலுவலர் ;

(6) மண்டல அலுவலர் மற்றும் மாநகராட்சி சட்ட அலுவலர் ஆகியோர் சட்டத்திற்குப் புறம்பான கட்டடம் தொடர்ந்து செயல்பட அதன் உரிமையாளர் திரு S.இராஜன் அவர்களுக்கு உதவுவது ;

(7) மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் சட்டத்தினையும் விதிகளையும் புறக்கணித்து, மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் குறித்துரையினையும் (Observation) மதிக்கத் தவறியது.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அடங்கிய முறையீட்டு மனுவுடன், 18.11.2016 நாளிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அம்பத்தூர் மண்டல அலுவலர் வழங்கிய விவரங்களையும் முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக அம்பத்தூர் மண்டல அலுவலரின் அறிக்கைப் பெறப்பட்டது. இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் தனது 29.01.2018 நாளிட்ட கடிதத்தில் "I wish to submit that since the pertaining issue relating to complaint has been resolved, am now withdrawing all the complaints against the owner of the building Mr. S. Rajan ( Rajan Supermarket) " எனக் குறிப்பிட்டு, " I wish to submit that now with free' and consent am signing this letter and forwarding this letter to the concerned officials to close all the complaint on with drawn ". எனத் தெரிவித்திருந்தார்.

3. முறையீட்டு மனுதாரர், தனது 09.01.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது முறையீடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை 15 தினங்களுக்குள் தெரிவிக்கவேண்டும் என்று இம்முறைமன்ற நடுவத்திற்கே கால அவகாசம் வழங்கிய மனுதாரர், தனது 29.01.2018 நாளிட்ட கடிதம் மூலம் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டு முறையீட்டினை விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்து, அதனை உறுதி செய்யும் வகையில் அக்கடிதத்தில் நோட்டரி பப்ளிக் கையொப்பம் பெற்றும் அனுப்பியுள்ளார். 09.01.2018 மற்றும் 29.01.2018 ஆகிய இரு நாட்களுக்கு இடைப்பட்ட 20 நாட்களில் என்ன மாய மந்திரம் நடந்ததோ, முறையீட்டு மனுதாரர் தனது குற்றச்சாட்டு மனுவினை விலக்கிக் கொண்டதற்குக் கீழ்க்காணும் காரணங்களாகவும் இருக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் யூகிக்கிறது :-

(1) அம்பத்தூர் மண்டல அலுவலர் / பொறியாளர் மற்றும் சென்னை மாநகராட்சி சட்ட அலுவலர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட சமரசத்தால் தனது குற்றச்சாட்டு மனுவினை விலக்கி கொண்டிருக்கலாம்.

(அல்லது)

(2) சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்பட்ட கட்டடத்தின் உரிமையாளர் திரு இராஜன் அவர்களிடம், மேற்குறிப்பிட்ட கட்டடம் குறித்த நடவடிக்கையினை முறையீட்டு மனுதாரர் தொடர்ந்து வலியுறுத்தாமலிருக்க ஏதேனும் வகையில் சமரசம் செய்து கொண்டிருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட இரண்டு நிகழ்வுகளாலோ அல்லது ஏதேனும் ஒன்றினாலாவது முறையீட்டு மனுதாரர் சமரசம் அடைந்திருப்பார். எனவேதான் தனது விலக்கல் முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் 16.02.2018 நாளிட்ட அம்பத்தூர் மண்டல அலுவலரின் கடிதமும் அமைந்துள்ளது. அக்கடிதத்தில்,

" One Mr. Rajan (owner) is running a shop namely Rajan Super Market. In this shop one Mr. Rajasekara Pandian ( petitioner herein) had carried out some electrical works at the Store as per the directions of Mr. Rajan. As there is pending payment for the electrical works mr. Rajasekara Pandian insisted Mr. Rajan to pay and settle it. But, he did not pay the pending amount ". எனவே, முறையீட்டு மனுதாரர் தனக்கு வழங்கப்பட வேண்டிய மின் வேலைக்கான நிலுவைத் தொகையினை திரு இராஜன் அவர்களிடமிருந்து பெறுவதற்காகவே, சட்டத்திற்கு புறம்பாகக் கட்டப்பட்ட வணிக வளாகக் கட்டடம், அதைக் கண்டும் மெத்தனமாகச் செயல்படும் மாநகராட்சி அலுவலர்கள் குறித்து ஒரு முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்து, தனது நோக்கம் பொது நலனுக்கானது என்ற ஒரு மாயத் தோற்றத்தினை ஏற்படுத்தி, தனக்கு வழங்கப்பட வேண்டிய மின்பணிக்கான நிலுவைத் தொகையினை பெற்றவுடன் தனது முறையீட்டு மனுவினை விலக்கிக் கொண்டுள்ளதாகவும் அறிய நேரிடுகிறது.

4. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் (மண்டலம் – 7) தனது 16.02.2018 நாளிட்ட விளக்க அறிக்கையில் விதிமீறலுடன் கட்டப்பட்ட மேற்படி 'இராஜன் சூப்பர் மார்க்கெட்' கட்டிடத்தை மூடி முத்திரையிடுவதற்கான அறிவிப்பினை 18.01.2018–இல் வழங்ப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளை சூர்ந்தாய்வு செய்கையில் சட்டத்திற்குப் புறம்பாக கட்டப்பட்ட கட்டடத்தில் பொதுமக்களுக்குப் பயன்படும் "இராஜன் சூப்பர் மார்க்கெட் " செயல்படுவதை தடுத்து நிறுத்தி அக்கட்டடத்தை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற பொது நலனை கருத்தில் கொள்ளாமல், தனது சுயநலனுக்காகவே இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் என உறுதியாகிறது. இராஜன் சூப்பர் மார்க்கெட் உரிமையாளரிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகையைப் பெற்றவுடன் தனது முறையீட்டு மனுவினை விலக்கிக் கொண்ட மனுதாரரின் நடவடிக்கை, பொது நலனுக்காகவே முறையீடு செய்து கொண்டதாக ஒரு தோற்றத்தினை ஏற்படுத்தி பின்னர் தனது மனுவினை விலக்கி கொண்ட செயல் இம்முறைமன்ற நடுவத்தின் பொன்னான கால நேரத்தை வீணடித்ததுடன், சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு முறையீட்டு மனுதாரர் தேவையற்ற மன உளைச்சல் மற்றும் பணிச் சுமையினை ஏற்படுத்தியுள்ளதுடன், எதிர்மனுதாரர்கள் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும் உறுதிப்படுத்தப்படவில்லையென இம்முறைமன்ற நடுவம் கண்டுணர்ந்துள்ளது. எனவே, முறையீட்டு மனுதாரரின் முறையற்ற செயலுக்காக 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 8 (2)–ன் <u>கீழ் செலவினமாக ரூ.5,000/–(ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) எதிர்மனுதாரர்களுக்கு முறையீட்டு மனுதாரர் செலுத்தவேண்டும் என இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.</u> முறையீட்டு மனுதாரர் செலுத்த வேண்டிய மேற்குறிப்பிட்ட தொகையினைப் பெற்று சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம் வரவு செலவு கணக்கில் உரிய தலைப்பின் கீழ் வரவு வைக்கவும் அம்பத்தூர் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது. மேற்குறிப்பிட்ட செலவினத் தொகையினை முறையீட்டு மனுதாரர் 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறும் நிலையில் 1864–ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின் படி நிலவருவாய் பாக்கி இருந்தார்போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும் எனவும் அம்பத்தூர் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலும், சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் "இராஜன் சூப்பர் மார்க்கெட் " செயல்பட்டுவருகிறது. இது சம்பந்தமாக மண்டல அலுவலர் மேற்கொண்ட நடவடிக்கையினைத் தொடர்ந்து அக்கட்டட உரிமையாளர் அம்பத்தூர் முன்சீப் நீதிமன்றத்தில் 444/ 2016 எண்ணிட்ட வழக்கினைத் தொடர்ந்து, அவ்வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் அறிய நேரிடுகிறது. இது சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர் சுட்டிக் காட்டிய மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் குறித்துரையில் (Observation)

> "No Civil Court shall entertain any suit a or proceedings or application in respect of the action taken by the CMDA or Corporation in respect of the illegal construction and encroachments on roads and pavements. All pending and future petitions filed / to be filed against CMDA and the Corporation relating to the illegal and unauthorized construction of buildings and or encroachment, and the demolition notice shall be placed before the special bench to be nominated by the Chief Justice". எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறித்துரையினைக் கருத்தில் கொண்டு, " இராஜன் சூப்பர் மார்க்கெட் " செயல்பட்டுவரும் கட்டடம் சம்பந்தமாக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும் சென்னை மாநகராட்சி சட்ட அலுவலர் / அம்பத்தூர் மண்டல அலுவலர் ஆகியோரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. **மண்டல அலுவலர் / உதவி பொறியாளர்,**
**அம்பத்தூர் மண்டலம்,**
**சென்னை மாநகராட்சி,**
**எம்.டி.எச். சாலை,**
**அம்பத்தூர், சென்னை – 600 057.**

2. **திரு C. இராஜசேகரபாண்டியன்,**
**எண்.106, கருக்கு பிரதான சாலை,**
**பாரத் நகர், மேனாம்பேடு,**
**அம்பத்தூர், சென்னை 600 053.**

3. **சட்ட அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் மாளிகை,**
**சென்னை – 600 003.**

4. **மாநகராட்சி ஆணையர்,**
**சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.**

5. **திரு ச. ராஜன்,**
**எண்.67– A வடக்கு பூங்கா தெரு,**
**வெங்கடாபுரம்,**
**அம்பத்தூர், சென்னை – 53.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**